முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 93/2021

தேதி : 12-11-2025

(பி.வா.சா.2) – திரு.கணேசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

என்ன படித்துள்ளேன் என்றால் 7ம் வகுப்பு. சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய தகவலின் பேரில் தான் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் வழக்கு சொத்தில் உரிமையுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கும் வழக்கு சொத்தில் உரிமையுள்ளது என்றால் சரியல்ல, அவர் ராமசாமியின் வளர்ப்பு மகன். நான் சொல்வதுபோல் வாதி ரூ.3.5 லட்சம் பெற்றுக்கொண்டு 1ம் பிரதிவாதிக்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, பணம் கொடுக்கும்போது நான் உடனிருந்தேன். நான் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், வாதி 1ம் பிரதிவாதியிடம் பணத்தை பெற்றுக்கொண்டு ஒரு ஆவணம் எழுதிக்கொடுத்ததாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K RENUGADEVI

Digitally signed by K RENUGADEVI
Date: 2025.11.12 15:58:59 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.